| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1 பிரான்ஸிஸ்லியோ | அ.வ.எண். 208/2017 | 27.11.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

7) எனக்கு செல்வராஜ் எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் எதன் அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் எனது தகப்பனார் பெயரில் இருந்த சிட்டா, பட்டா அடிப்படையில் எழுதிக்கொடுக்கப்பட்டது. மேற்படி பட்டா மற்றும் சிட்டாவில் வேறு நபர்கள் பெயர் இருந்ததா என்றால் எனது பெரியப்பா பெயர் இருந்தது, அதை தவிர்த்து வேறு பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்ததா என்றால் செல்வராஜ் பெயர் இருந்தது. வா.சா.ஆ.1,2 ஆவணங்களில் எதை வைத்து எனக்கு ஆவணம் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் வா.சா.ஆ.1 ஆவணத்தை வைத்து எழுதிக்கொடுக்கப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் என்னுடைய அண்ணன் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கண்ட காரணத்தினால் எனது அண்ணன் எனக்கு ஆவணம் எழுதி கொடுக்க தகுதிஅற்றவர் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் பட்டா இணைக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

8) மேற்படி வா.சா.ஆ 4 ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வருவாய் ஆவணங்களை மட்டுமே வைத்து நான் ஆவணம் தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல்செய்துள்ளேன் என்றால்சரியல்ல. தாவா சொத்து எனது தகப்பனாருக்கு தான் சொந்தம் என்பதற்கு வருவாய் ஆவணங்களை தவிர வேறு ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. பாகம் பிரிக்கப்பட்டதாக கூறும் ஆவணங்களை நான் நீதிமன்றத்தில்

தாக்கல் செய்யவில்லை என்றாலும் பாகம் பிரிக்கப்படாத சொத்தை பொறுத்து எனது சகோதர சகோதரிகளை பொறுத்து முறைப்படி ஆவணங்கள் இல்லாத நிலையில் எனது சகோதரர் என்ற முறையில் செல்வராஜ் என்பவர் எனக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.